புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# அண்ணாவின் இந்து இட்லரிசமும் தமிழவனின் 'ஷம்பாலா'வும்

**முனைவர் இரா. இராஜா**
*தமிழ் உதவிப்பேராசிரியர்*
*தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் – 635601*

**முன்னுரை**

*கருத்தியல்கள் காலம்தோறும் உற்பத்தி செய்யப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அந்தக் கருத்தியல்கள் மறுமலர்ச்சிக் காலத்தில் கருத்துமுதல்வாதம் பொருள்முதல்வாதம் என்று பிரித்து அணுகப்பட்டன. அமைப்பியல் சிந்தனை வந்த பிறகு மொழிமையச் சிந்தனை உருவானது. பொருளே மொழியாகவும் அந்த மொழியே கருத்தாகவும் பார்க்கப்பட்டன. அமைப்பியல் சிந்தனையின்படி, சொற்களும் அது உருவாக்கும் பொருளும் இயற்கையான உறவுகொண்டதல்ல. அதனால் மொழி உருவாக்கும் கருத்துகளை இடம், அறிவு, மனம் சார்ந்து வித்தியாசப்படுத்திப் பார்க்கும் மனநிலை உருவானது. வாசிப்பாளர் முதன்மைப்படுத்தப்பட்டார். பன்மைத்துவ வாசிப்பு உருவானது. மொழியால் உருவாக்கப்பட்ட அனைத்தும் பிரதி என்ற சிந்தனை பரவியது. அண்ணாவின் 'இந்து இட்லரிசம்' ஒரு கட்டுரை நூல். தமிழவனின் 'ஷம்பாலா' ஒரு புனைகதை. புதிய வரலாற்றுவாதம் புனைவையும் வரலாற்றையும் வேறுவேறாகப் பார்க்கவில்லை. மாறாக அது மொழிசார்ந்ததாகப் பார்க்கப்பட்டது.மொழியில் புனைவும் உண்மையும் கலந்து இருக்கும். இரண்டு பிரதிகளும் 'இந்து இட்லரிசம்' என்ற கருத்தியலை வெவ்வேறு காலத்தில் பேசி இருக்கின்றன. வடிவங்கள் மாறியிருக்கின்றன காலங்கள் மாறியிருக்கின்றன. ஆனால் கருத்தியல் மாறவில்லை. எனினும் கருத்தியல் எற்படுத்தும் விளைவு மாறியிருக்கிறது என்பதை*

*வாசிப்பினூடாக உணர முடிகிறது. அந்த விளைவு அகம் ×புறம் சார்ந்து அமைந்திருக்கிறது. அண்ணாவின் கட்டுரை புறத்திற்கும் தமிழவனின் ஷம்பாலா நாவல் அகத்திற்கும் முதன்மை கொடுத்து அமைந்திருக்கிறது. அதே நேரம் அண்ணாவின் கட்டுரை அகத்தைப் பற்றிப் பேசாதபோது 'ஷம்பாலா' நாவல் புறத்தையும் ஒரு பொருளாக்கிப் பேசுகிறது. இத்தகைய விளைவுகளின் பின்னணியைக் கட்டுரை ஆராய்கிறது. கட்டுரை இரண்டு பிரதிகளின் இணைநிலைகளையும் விலகல் நிலைகளையும் ஒப்பிட்டு ஆராய்வதால் ஒப்பாய்வு அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.*

***அண்ணாவின் 'இந்து இட்லரிசம்'***

*அறிஞர் அண்ணா திராவிட நாடு என்ற பத்திரிகை நடத்துகிறார். அதில் இந்து இட்லரிசம் என்னும் தலைப்பில் 1942 இல் ஒரு கட்டுரை எழுதுகிறார். அக்கட்டுரை நக்கீரன் – பரதன் உரையாடும் வகையில் அமைந்திருக்கிறது. அது பகுத்தறிவு உரையாடலாக அமைந்திருக்கிறது. அதில், 'ஹிந்து ஹிட்லரிசம்' வேறு என்றும் 'ஜெர்மானிய ஹிட்லரிசம்' வேறு என்றும் ஜெர்மானிய ஹிட்லரிசத்தை சனநாயகக் கோட்பாடுகளைக் கொண்டு வீழ்த்திவிட முடியும் என்றும் ஹிந்து ஹிட்லரிசம் வீட்டுக்கு வீடு ஐந்தாம் படையைக் கொண்டிருக்கும் என்றும் அதை வீழ்த்த பழங்குடி பெருமக்களால்தான் முடியும் என்றும் ஹிந்து ஹிட்லரிசம் அமைதியைப் பேசிக்கொண்டே வன்முறையை வளர்க்கும் என்றும் அது சாதாரண விசயங்களிலும் தலையிடும் என்றும் அதை அழிக்க இந்து என்ற அடையாளத்திலிருந்து தப்பிச் செல்ல வேண்டும் என்றும் கூறப்படுகின்றன. இக்கருத்துகள் அனைத்தும் ஹிந்து ஹிட்லரிசம் குறித்த முழுமையான புரிதல் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. அப்புரிதல் ஹிந்து ஹிட்லரிசம் ஐம்புலன்கள் சார்ந்த அறிதலில் மட்டும் இயங்குவதாகவும் அதைக் கண்ணால் பார்க்கவும் காதால் கேட்கவும் பகுத்தறிவுடன் வினையாற்றவும் முடியும் என்றும் சொல்கிறது. அது இந்து × தமிழ் என்ற மதக்கொள்கை அடிப்படையிலும் ஆரியம் × திராவிடம் என்ற இன அடிப்படையிலும் எழுதப்பட்டிருக்கிறது.*

***தமிழவனின் 'ஷம்பாலா'***

*'ஷம்பாலா' நாவல் 'ஓர் அரசியல் நாவல்' என்னும் துணைத்தலைப்புடன் தமிழவன் அவர்களால் எழுதப்பட்டு 2019 - ல் வெளிவந்துள்ளது. இந்நாவல் இரண்டுவகைக் கதைப்போக்குகளைக் கொண்டது. ஒன்று : நடுத்தர வயதுடைய, தனது மனைவி மற்றும் ஒரே மகளான அமரியுடன் அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்துவருகிற, தனது சிந்தனையை இலக்கியத்தின்வழி வெளிப்படுத்துவதும் சொற்பொழிவாற்றுவதுமாகிய பணியைத் தொடர்ந்து செய்கிற அமர்நாத் என்பவர், அரசாங்கத்தின் ஆணைக்கிணங்க சிந்தனைக்காவலர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதும் கட்டுப்படுத்தப்படுவதும். இரண்டு: சிந்தனைக்காவலர்களால் கண்காணிக்கப்படுகிற, கட்டுப்படுத்தப்படுகிற அமர்நாத் மனதில் தோன்றுகிற ஒரு சொல்லான, 'ஹிட்லர்' என்னும் சொல் தனித்த கதையாக எழுதப்படுவது. அந்தக்*

*கதை ஒரு ஹிட்லர் எப்படி உருவாகிறான் அல்லது உருவாக்கப்படுகிறான் என்பதை எழுதிப்பார்க்கிற ஒரு கதை. இரண்டு கதைகளும் அடுத்தடுத்த இயல்களில் மாறி மாறி எழுதப்பட்டு இறுதி இயலில் ஒன்றாக்கப்படுகிறது.*

*ஜெர்மானிய ஹிட்லரும் இக்கதையில் வரும் ஹிட்லரும் வேறு வேறு என்று கதை தெளிவுபடுத்துகிறது. ஒரு சொல் கதையாக மாறுகிறது. சிந்தனை முதன்மை ஆதாரமாக மாறுகிறது. சிந்தனையை அழிப்பதே கண்காணிப்புப் போலிசாரின் முதல்பணியாக இருக்கிறது. அமர்நாத் என்னும் சிந்தனையாளனை புற உலகச் சக்திகள் குழப்பியடிக்கின்றன. அதன்வழியாக அவன் மனம் குழம்புகிறது. அதேநேரம் ஹிட்லர் கதை எழுதுவதன்வழி ஒரு சுதந்திரத்தை நோக்கிப் பயணிக்கிறது. அந்த விடுதலை கண்காணிப்பின் அரசியலால் பாதிக்கப்படாத குழந்தை அமரியின் மூலம் நடக்கிறது. மொழி முதன்மைப் பொருளாகவும் அதன்வழியில் அமையும் அகமும் புறமும் இயங்கியல் தன்மையிலும் கொண்டு இக்கதை எழுதப்பட்டுள்ளது. இக்கதை எதையும் இருமை எதிர்வாக முன்னிறுத்தவில்லை. மாறாக, சாதி, மதம், அரசியல், அதிகாரம், பண்பாடு, இனம், பகுத்தறிவு, கலை, சிந்தனை, புனைவு, பெண்ணியம், தலித்தியம் எனப் பல கருத்தியல்களும் இணையும் தளமாக உள்ளன.*

**இரு பிரதிகளின் இணைவுகள்**

**ஹிந்து ஹிட்லரிசம்**

*'ஹிந்து ஹிட்லரிசம்' என்ற தலைப்பே ஜெர்மானிய ஹிட்லரிசத்திலிருந்து வேறுபட்டது ஹிந்து ஹிட்லரிசம் என்பதை உணர்த்துகிறது. மேலும், "ஹிந்து ஹிட்லரிசத்தை, பார்ப்பனிய பாசிசத்தை, ஆரிய ஏகாதிபத்தியத்தை, சர். கிரிப்சாலும் இந்நாட்டிலிருந்து தொலைக்க முடியாது" (திராவிடநாடு,1942) என்று கூறப்படுகிறது. ஹிந்து ஹிட்லரிசம் பார்ப்பனிய பாசிசத் தன்மையும் ஆரிய ஏகாதிபத்தியத் தன்மையும் கொண்டது என்பதை அடிக்குறிப்பில் இடம்பெறும் சொல்லாட்சிகள் சுட்டுகின்றன. அதிலும் பார்க்க, உலகம் முழுவதிலும் பாசிசமும் ஏகாதிபத்தியமும் நடைமுறையில் இருந்தது, இருக்கிறது. ஆனால் பார்ப்பனிய, ஆரிய ஆகிய சொற்கள் ஒட்டுச் சொற்களாக இடம்பெற்றுள்ளன. காரணம் மற்ற பாசிசத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எளிதில் அடையாளம் கண்டுவிட முடியும், இதனை அடையாளம் காண முடியாது. ஹிந்து ஹிட்லரிசம் "வீட்டிற்கு வீடு ஐந்தாம்படையைக் கொண்டிருக்கும்", சாந்தம், சமாதானம், சுபீட்சம் என்று பேசிக்கொண்டே சமரிலும் சதியிலும் சித்திரவதையிலும் இரண்டறக் கலப்பதுபோம்" (திராவிடநாடு,1942). இவ்வாறு இரண்டு மனநிலையைக் கொண்டு இயங்கும்; பக்கத்திலே செயல்படும்; சாதியச்சங்கிலியோடு பிணைந்திருக்கும். இவ்வாறு கட்டுரையில் ஜெர்மானிய ஹிட்லரிசம் வேறு என்றும் ஹிந்து ஹிட்லரிசம் வேறு என்றும் சொல்லப்படுகிறது.*

*"அமர்நாத்தின் மனதில் உருவான கதையில் வரும் ஹிட்லருக்கும் நிஜ ஹிட்லருக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கும் என்றால் அது எதேச்சையானதுதான்" (ஷம்பாலா, 2019:218). இந்த ஹிட்லர், கிராமத்தில் பிறந்து ஒரு அரசியல் சக்தியாக வளர்கிறார். பிராமணியம் அவனை அதிகாரத்தின் சக்தியாக மாற்ற முனைகிறது. சொல்லப்போனால் அவனை பிராமணியம் பயன்படுத்திக்கொள்கிறது. மேலும் தலித்தியத்தையும் இடைநிலைச்சாதியைச் சேர்ந்த*

*ஹிட்லரையும் மோதவிடுகிறது. இந்த ஹிடலர் உளவியல், இனம், சாதி, அரசியல், பாலியல், அதிகாரம், பிராமணியம்..போன்றவற்றால் உருவாக்கப்படுகிறான். சமூகப் புற நிகழ்வுகளால் அவனது ஆசைகள் தூண்டப்படுகின்றன. அவன் உருமாறிக்கொண்டே இருக்கிறான். இவ்வாறு நாவலில் ஜெர்மானிய ஹிட்லரிசம் வேறு என்றும் ஹிந்து ஹிட்லரிசம் வேறு என்றும் சொல்லப்படுகிறது.*

***ஹிந்து ஹிட்லரிசத்திலிருந்து வெளியேறுதல்***

*ஹிந்து ஹிட்லரிசம் மோசமானது என்று பேசிய அண்ணா அதிலிருந்து விடுதலை பெற முடியும் என்பதையும் உணர்த்துகிறார். "ஹிந்து ஹிட்லரிசத்தை இந்நாட்டுப் பழம்பெருங்குடி மக்களாகிய நாம் முனைந்தால்தான் முறியடிக்க முடியும்" (திராவிடநாடு,1942) என்றும் "நாட்டுக்கு உண்மையான விடுதலை வேண்டுமென்றால் இந்த ஹிந்து ஹிட்லரிசத்திலிருந்து நாம் தப்ப வேண்டும்" (திராவிடநாடு,1942) என்றும் கூறுகிறார். அதாவது இந்து அடையாளத்திலிருந்து தப்ப நமது தமிழர் அடையாளத்தைக் கையில் எடுக்க வேண்டும் என்று கூறுகிறார். இவ்வாறு கட்டுரையில் வெளியேறுதல் செயல்படுகிறது. "ஒரு புனைவுப் பாத்திரம் தோன்றி அதற்கேற்ற பிற பாத்திரங்களுடன் முழுக்கதையாய் உருக்கொண்டதன் நோக்கமென்ன என்று கேட்டுப்பார்த்தபோது ஏதும் மனதில் தென்படவில்லை. எனினும் ஓர் அழுத்தத்திலிருந்து இப்போது விடுபட்டுள்ளார் என்பது ஆறுதல்" (ஷம்பாலா, 2019:213). கதை எழுதுதல் செயல்பாடு வெளியேறுதலாக அமைந்திருக்கிறது. எழுதுகிற, சிந்தனை செய்கிற ஒருவன் அந்தச் சிந்தனையைக் கொண்டு எழுதுவதன்வழித் தானும் வெளியேறுகிறான். அதேநேரத்தில் பிறருக்கும் அறிதல்நிலையைக் கொடுக்கிறான். மொழியால் ஆன உலகில் மொழியாலேதான் எதிர்வை நிகழ்த்த முடியும் என்பதை அமர்நாத் பாத்திரம் உணர்த்துகிறது. மேலும் ஹிந்து ஹிட்லரிசத்துக்கு ஆட்படாத ஒரு குழந்தையால் தவறாகச் சித்திரிக்கப்பட்ட எண்ணங்களிலிருந்து ஒருநபரை வெளியேற்ற முடியும் என்பது அமரி பாத்திரத்தின் வழி உணர்த்தப்படுகிறது. இவ்வாறு நாவலில் வெளியேறுதல் செயல்படுகிறது.*

***இரண்டு மனநிலைகள்***

*"ஹிட்லரிசம் சாந்தம், சமாதானம், சுபீட்சம் என்று பேசிக்கொண்டே சமரிலும் சதியிலும் சித்திரவதையிலும் இரண்டறக் கலப்பதுபோம்" (திராவிடநாடு,1942). நேர்மறையான செயல்பாடு என்பது மேற்பூச்சு. வன்முறை என்பது அதன் அடிநாதம். இதனை, ஹிந்து ஹிட்லரிசம் பக்தி, பரமன், அருள் என்றுரைக்கும். ஆனால் உள்நோக்கம் அடிமைத்தனத்தைப் பெரும்பாலான மக்கள்மீது சுமத்த வேண்டும் என்பதுதான்" (திராவிடநாடு, 1942). மற்றவர்களின் சுதந்திரத்தைப் பறித்து ஏகாதிபத்தியத்தை வளர்ப்பதுதான் ஹிந்து ஹிட்லரிசம். இவ்வாறு கட்டுரையில் இரண்டு மனநிலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆசையைத் தூண்டுவது, உதவுவது, உணவு கொடுப்பது, உடற்பயிற்சி கொடுப்பது, கூட்டம்சார் கொண்டாட்ட மனநிலையைத் தருவது போன்ற செயல்கள் மேற்பூச்சு சார்ந்தவை. சான்று இளைஞன் பாத்திரம். அந்தப்பாத்திரத்தை சாமியார் ஒருவன் தனது தம்பி நலனுக்காகக் குற்றாவாளியாகப் பயன்படுத்திக்கொள்கிறார். இது அடிமைநிலை. பாசிச அதிகாரத்தை அழிப்பதற்கு இளைஞர் விநாயக் ஒரு யோசனையை*

அமர்நாத்துக்குத் தருகிறார். அது, "அவர்கள் சார்பில் சிந்தித்தால்தான், அந்தக் கூட்டத்தை நீங்கள் தோற்கடிக்க முடியும்" *(ஷம்பாலா, 2019:185)* என்பதாகும். அது என்னவென்றால் மக்களுக்கு உடனடியாகத் தேவையானவற்றைச் செய்து தங்களை இலட்சியக்காரர்களாகக் காட்டிக்கொள்வது. அவர்கள் இவ்வாறு மக்களோடு மக்களாக இணைந்து செயல்பட்டு அவர்களுக்குப் பிடித்தவர்களாக மாறி, பின்பு தனது கருத்தியலை விதைத்து அடிமை மனத்தை வடிவமைக்கிறார்கள். இவ்வாறு நாவலில் இரண்டு மனநிலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

**இரு பிரதிகளும் விலகும் நிலைகள்**

**இரட்டை எதிர்மறையும் பன்மைத்துவமும்**

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, அதனை அழிப்பதற்கு உருவான மாற்றுச்சிந்தனைதான் இருமை எதிர்வு. பகுத்தறிவு மரபிலும் இருமை எதிர்வு செயல்படுகிறது. அண்ணா கட்டுரையில் இருமை எதிர்வு மதக்கொள்கை சார்ந்து இந்து×தமிழ் என்றும் இனம் சார்ந்து ஆரியம்×திராவிடம் என்றும் சுட்டப்படுகிறது. இது இருபக்கமும் கத்தி போன்றது. பகுத்தறிவு வளர்வதுபோல இந்து ஹிட்லரிசமும் வளரும். அது வளர்ந்ததின் விளைவுதான் ஷம்பாலா நாவல். அந்தவகையில் ஷம்பாலா நாவல் உருவாக்கத்திற்கு துணை செய்திருக்கிறது அண்ணாவின் கட்டுரை. ஹிந்து ஹிட்லரிசம் ஏகாதிபத்தியத் தன்மை கொண்டு செயல்பட்டதும் அதை எதிர்நிலையில் வைத்து பகுத்தறிவு உரையாடியதும் அதன் பலமாகும். அப்படியென்றால் பகுத்தறிவு ஆபத்தா? என்றால் அப்படி சொல்லிவிட முடியாது. ஒரு செயல்பாடு சில விளைவுகளை உருவாக்குவதைத் தடுக்க முடியாது. இது ஒரு விளையாட்டு. விளையாட்டில் இருவருமே வெற்றியாளராகவும் தோல்வியாளராகவும் தொடர்வர். அதுபோலத்தான் இருமை எதிர்வு ஒரு விளையாட்டு. அதில் இரண்டு சக்திகளும் வளரும். ஷம்பாலா நாவல் இந்து ஹிட்லரிசத்தை பன்மைத்துவ அடிப்படையில் அணுகுகிறது. அது அமைப்பியல் சிந்தனையை உள்வாங்கிக்கொண்டு எழுதப்பட்ட ஒரு நாவல். மொழியால் எழுதப்பட்ட அனைத்தும் பிரதி ஆகும். அந்த மொழி ஒரு மனஅமைப்பை உருவாக்குகிறது. மொழியால் உருவாக்கப்பட்ட ஒரு மன அமைப்பு மொழியாலே அனைத்தையும் எதிர்கொள்கிறது. இங்கு அகமும் புறமும் இயங்கியல் போக்காகப் பார்க்க முடிகிறது. இன்னும் சொல்லப்போனால் அகம் முதன்மையானதாக மாறுகிறது. சான்று அமர்நாத்தின் எண்ணம் சிதைக்கப்படுதல். ஏனென்றால் மொழி ஒரு மன அமைப்பு. அதைச் சிதைக்க வேண்டும். அதைச் சிதைத்தால்தால் மொழி உருவாக்கும் பன்முகத்தன்மைகளைச் சிதைக்க முடியும்.

இனவாதம் ஒரு ஜெர்மானிய ஹிட்லரை உருவாக்கியது. ஷம்பாலா உருவாக்கும் ஹிட்லர் இனம், உளவியல், சாதி, மதம், பெண்ணியம், தலித்தியம், பிராமணியம், அதிகாரம், அரசியல் போன்ற பலவற்றால் உருவாக்கப்படுகிறான். இந்தப் பன்மைத்துவத்தால் உருவாக்கப்படும் ஹிட்லர் பன்மைத்துவத்தால் அணுகப்படவும் வேண்டும். ஹிந்து ஹிட்லரிசத்தைப் பல கிளை அமைப்புகள் சேர்ந்து உருவாக்குகின்றன. அத்தனைக் கிளை அமைப்புகளும் ஹிந்து ஹிட்லரிசத்தை அகம் சார்ந்து வடிவமைக்கின்றன. ஹிட்லரிசம் ஒவ்வொரு அகத்திற்குள்ளும் இன்மையின் வழி உரையாடி அகத்தை வடிமைக்கிறது. இந்து ஹிட்லரிசம் நெகிழ்வுத்தன்மை

*கொண்டது. எல்லாப் புது சிந்தனைகளையும் புது வடிவங்களையும் உள்வாங்கிக்கொண்டு தன்னை வளர்த்துக்கொள்கிறது. அதை எதிர்க்கும் கருத்தியல்களோ வரையறைக்குத் தங்களை ஒப்படைத்துக்கொண்டுள்ளது. இந்தியச் சமூகத்தில் சாதி, மத, பாலியல் வேறுபாடுகள் நிறைந்து காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகளே இந்து ஹிட்லரிசத்தின் பலம். இந்த வேறுபாடுகளினூடே ஹிந்து ஹிட்லரிசம் தன்னை வடிவமைத்துக்கொள்கிறது. இந்த வேறுபாடுகள் மாற்றுச் சிந்தனைகளைத் தனித்தனியாக்குகிறது. சுயபரிசோதனை அற்றதாக மாற்றுகிறது.*

*மாற்றுச்சிந்தனைகளும் பலம்தான். எப்படியென்றால் அது பன்முகத்தன்மைகளை உடையது. பெண்ணியம், தலித்தியம், திராவிடம், அமைப்பியல், பின் அமைப்பியல், உளவியல், மார்க்சியம் எனப் பல மாற்றுச்சிந்தனைகள் அனைத்தும் விடுதலைக் கருத்தியல்கள். விடுதலைக்கு எதிரானது ஹிந்து ஹிட்லரிசம். அனைத்து விடுதலைக் கருத்தியல்களும் ஹிந்து ஹிட்லரிசத்தின் மீது பன்முகத்தாக்குதல்களைத் தொடுக்கும்போது அதனால் எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்படும். அதேநேரம் அந்த அதிகாரத்தால் எந்த ஒன்றையும் தன்வயப்படுத்த முடியாது. அதற்கு நமக்குச் சுயபரிசோதனை தேவை. இந்திய சமூகத்தில் இருக்கும் சாதிய, மத, பால் வேறுபாடுகளை புறம் ஒதுக்கி மாற்றுச் சிந்தனைகளை உட்சேர்த்துக்கொண்டே இருக்க வேண்டும். இந்த விளையாட்டு தொடர்ச்சியாக் நிகழ வேண்டும். வேறுபாடுகள் இந்து சக்திகளுக்கு பலம் என்றால் பன்முக மாற்றுச் சிந்தனைகள் மாற்றுச் சிந்தனைகளின் பலம். அந்த உரையாடல் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு மொழிவயப்பட்ட அமைப்பியல் சிந்தனை வேண்டும். பன்முகத்தன்மையிலான விளைவை நாவல் தனது எழுதுதலில் ஏற்படுத்துகிறது.*

**துணைநூற்பட்டியல்**


- ❖ *தமிழவன், 2019 : ஷம்பாலா, பெங்களூர் : சிற்றேடு.*
- ❖ *அண்ணா, 1942 : இந்து இட்லரிசம், சென்னை : திராவிடநாடு*
- ❖ *ஜமாலன், 2020 : உடலரசியல், சென்னை : காலக்குறி.*